## மினுவாங்கொடை நகர சபை
## கம்பஹா மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 மே 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஆகஸ்ட் 21 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர, மினுவாங்கொடை நகர சபையின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | வைப்பு பதிவேட்டிலிடப்பட்டிருந்த 2018 நவம்பர் 12 முதல் 2018 டிசம்பர் 31 வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 307,167 கலி பவுசர் வருவாய் கணக்கிலிடப்படவில்லை. | ஆண்டிற்கான வருவாயாகக் கணக்கிலிடப்பட வேண்டும். | நாட்குறிப்பு 02 இன் மூலம் 2019 ஆம் ஆண்டில் திருத்தப்படும். |
| (ii) | மீளாய்வாண்டின் இறுதியிலான மதியுரைக் கொடுப்பனவு கட்டணமாகிய ரூபா 217,500 திரண்ட நிதியத்திலும் கடன் கொடுத்தோர் கணக்கிலும் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. | ஆண்டிற்கான கொடுக்கல் வாங்கல்கள் சரிவரக் கணக்கிலிடப்பட வேண்டும். | இது கொடுப்பனவு செய்யப்பட வேண்டியதாக உள்ளதால் திரண்ட நிதியத்திலிருந்து வழங்கப்படும். |
| (iii) | 2017 டிசம்பர் 20 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் சேர்த்துக் கொள்ளப்படாத காணிச் சுவீகரிப்புக்குரிய காணிகளை மீண்டும் உரித்தாளரிடம் வழங்குவது தொடர்பான அபிவிருத்திப் பெறுமதியான ரூபா 2,711,520 அவ்வாறு காட்டப்படாது வைப்புகளின் | கொடுக்கல் வாங்கல் மூலம் உருவாகும் வருவாய் சரிவர இனங்காணப்பட வேண்டும். | நாட்குறிப்பு 03 மூலம் வருவாயிலிடப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | கலவையாக கணக்கிலிடப்பட்டிருந்தது. | | |
| (iv) | மீளாய்வாண்டில் நூலகத்தை நிர்மாணித்ததிலான முதலீடு தேறியதன் காரணமாக பெறப்பட்ட ரூபா 22,000,000 முதலீடாகக் காட்டப்பட்டிருந்தது. | கொடுக்கல் வாங்கல் சரிவர கணக்கிலிடப்பட வேண்டும். | 2019 நிதிக்கூற்றுத் தயாரிப்பின் போது பெற வேண்டியனவாகக் காட்டப்படும். |

**(ஆ) கணக்காய்விற்குத் தேவையான ஆவணச் சான்றின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விநோதவரி வருவாய் ரூபா 89,400 ஆகும். இதனை சான்றுறுதிப்படுத்துவதற்கான டிக்கட்டுக்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக்கூற்று மீதிகளை உறுதி செய்யும் சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நானாவித வருவாய் தகவல்களை நாளதுவரையாக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

## 1.4 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 2016 ஒக்டோபர் 10 ஆந் திகதிய LGD/09/01/15 ஆம் இலக்க மேல் மாகாண உள்ளூராட்சி திணைக்களக் கடிதம். | உள்ளூராட்சி பிரதேசத்தில் இறைச்சி விற்பனையை ஒழுங்குபடுத்தவும் நிர்வகிக்கவும் உப விதிகள் தயாரிக்கப்படவில்லை. | உப விதிகள் தயாரிக்கப்பட வேண்டும். | உப விதித் தயாரிப்புக்கான ஆரம்ப வேலைகள் நடைபெறுகின்றன. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 18,370,592 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 35,316,728 ஆகும்.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 10,287 | 11,659 | 10,550 | 7,058 | 10,525 | 10,652 | 10,833 | 5,949 |
| (ii) | வாடகை | 20,398 | 21.356 | 21,006 | 1,297 | 21,640 | 19,426 | 19,599 | 946 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 620 | 491 | 491 | - | 532 | 1,137 | 576 | 05 |
| (iv) | ஏனைய வருமானம் | 29,281 | 16,101 | 16,101 | - | 17,261 | 31,361 | 28,444 | - |

### 2.2.2 தீர்வையும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது பரிந்துரை இல்லாது ரூபா 170,453 தீர்வையானது பதிவழிக்கப்பட்டிருந்தது. | கிராம உத்தியோகத்தரின் பரிந்துரை அவசியம் | 2019 முதல் பதிவழிப்பின் போது கிராம உத்தியோகத்தர் பரிந்துரை பெறப்படும். |

### 2.2.3 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர சபையின் இறைச்சிக் கடை ஒன்றினது 2014 தொடக்கம் 2018 டிசம்பர் வரையிலான ரூபா 363,333 நிலுவையை அறவிடுவதற்கு 2016 ஆம் ஆண்டில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. | நிலுவை அறவிடப்பட வேண்டும். | 483/காசு எனும் வழக்கு தொடரப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2019 மார்ச் 08 ஆந் திகதியளவிலும் 21 வர்த்தக நிலைய நிலுவையாகிய ரூபா 463,900 அறவிடப்பட்டிருந்தது. | நிலுவை அறவிடப்பட வேண்டும். | 2019 மார்ச் 31 ஆந் திகதியளவில் ரூபா 247,350 அறவிடப்பட்டிருந்தது. |

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணமாக 04 ஹோட்டல்கள் மற்றும் விழா மண்டபங்களிலிருந்து ரூபா 56,400 அறவிடப்பட வேண்டியிருந்தது. | சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | விழா மண்டபங்கள் இரண்டிற்கும் சுற்றாடல் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. 2 ஹோட்டல்களுக்கு அவற்றை வழங்குவதற்கு பரிசீலனை செய்யுமாறு சமுதாய அபிவிருத்தி உத்தியோகத்தர் பணிக்கப்பட்டுள்ளார். |

### 2.2.5 ஏயை வருமானம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர மத்தியில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த நிலையான விளம்பர பலகைகளுக்கான கட்டணம் அறவிடப்படவில்லை. | சகல பிரதேச விளம்பரம் பலகைகளுக்கும் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | கட்டணமின்றி காட்சிக்கு வைக்கப்பட்ட பலகைகளுக்கு கட்டணம் அறவிடப்படும். |
| (ஆ) | சபையின் பிரதேசத்தில் உள்ளடங்கும் 08 தொலைத் தொடர்புக் கோபுரங்களுக்கு தீர்வை மதிப்பிடப்பட்டு வருவாயை அதிகரிக்கவில்லை. | மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு தீர்வை அறவிடப்பட வேண்டும். | தீர்வையை மதிப்பீடு செய்து வருவாயை அதிகரிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். |
| (இ) | நகர சபைக்குள் சுபர் வர்த்தகக் கூடங்கள், ஹோட்டல்கள், தங்குமிடங்களின் மருந்து மற்றும் வெளிநாட்டு மது விற்பனையால் வரும் ஏனைய வருவாய் சம்பந்தமாக கட்டணம் அறவிடப்படவில்லை. | விதிகள் அமுலாக்கப்பட்டு கட்டணம் அறவிடப்பட வேண்டும். | அந்த வருவாய்களுக்கான தோற்றுவாய்களுக்கு 2019 ஆம் ஆண்டில் வெவ்வேறு அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் அமுலாகிய தொழில் பிரிவின் 10 செயற்திட்டங்களும் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கியிருந்தன. வருடாந்த தொழில் முன்னேற்ற அறிக்கையில் காட்டப்பட்டு, வருடாந்தத் திட்டத்தில் குறிப்பிடப்படாத ரூபா 10,607,843 பெறுமதியை 16 தொழில்கள் அமுலாகியமையால் செயல் நடவடிக்கைத் திட்டம் ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்பாட்டை நிறைவேற்ற வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் அமுலாக்குவதற்கு வரவு, செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட போதும், தேவைக்கேற்ப 2017 ஆம் ஆண்டிலேயே அச் செயற்திட்டம் முடிவடைந்ததுடன், சுட்டிக்காட்டப்பட்ட ஏனைய 16 தொழில்களும் புதிய சபை அமைக்கப்பட்டதன் பின்னர் அமுலாக்கப்படும். |

#### (ஆ) எதிர்பார்த்த நலனைப் பெறாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஹதிரம சந்தியில் ரூபா 5,388,055 செலவழிக்கப்பட்டு 2018 சனவரி 04 ஆந் திகதி கழிவறைத் தொகுதி ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. எனினும், 2019 மார்ச் 08 ஆந் திகதியளவிலும் இது பயன்படுத்தப்படாதிருந்தது. | எதிர்பார்த்த நோக்கத்தை அடைவதில் கவனம் செலுத்தப்படும். | 2018 சனவரி 04 ஆந் திகதி ஒப்பந்தகாரர் சபையிடம் ஒப்படைத்திருந்தார். எனினும், தேர்தல் காரணமாக இக்கழிவறைத் தொகுதியை ஆரம்பித்தல் தற்காலிகத் தடைக்குள்ளானது. நியமிக்கப்பட்ட புதிய அங்கத்தவர்களது சபை கழிவறைத் தொகுதியையும் உள்ளடக்குமாறு புதிய கடைத் தொகுதியை நிர்மாணிப்பதற்கான முன்மொழிவுடன் ஆரம்ப வேலைகள் தொடங்கியுள்ளன. |

## (இ) நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் இலக்கை அடைவதற்கு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள விதி முறைகளை இனங்கண்டுள்ளதாகக் கூறப்பட்டபோதும், இது தொடர்பான சகல செயற்திட்டத்திற்கும் தொடர் நடவடிக்கைகளும் செயல் முன்னேற்ற மீய்வும் மேற்கொள்ளப்பட்டு நலிவுகளும் சக்தியும் இனங்காணப்பட்டு பொருத்தமான திருத்தம் மேற்கொள்ளப்படாததால் வறுமைக் குறைப்பு சுய தொழில் வேலை வாய்ப்பு நிகழ்ச்சித்திட்டமான வறியோருக்கு ஆறுதல் வழங்கும் சந்தை தோல்வி அடைந்திருந்தது. | சகல செயற்திட்டங்கள் தொடர்பாகவும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நலிவுகளும் சக்தியும் இனங்காணப்பட்டு இலக்கை அடைய வேண்டும். | வறியோருக்கு ஆறுதல் வழங்கும் சந்தையானது வாரச் சந்தைக்கருகே நடைபெற்றதால் அவர்களது வியாபரம் குறைவடைந்து அதன் காரணமாக வாரச் சந்தைக்கு வெளியே வியாபாரத்தை மேற்கொள்கின்றனர். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சபைக்குரிய 01 றூட், 35.36 பர்ச்சர்ஸ் விசாலமான காணியுடனான வீடு 1988 முதல் இற்றை வரை 31 ஆண்டுகளாக ஒரே நபரால் பயன்படுத்தப்படுகின்றது. 2007 முதல் 2018 டிசம்பர் 31 வரை வாடகை நிலுவையான ரூபா 972,000 அறவிடப்படாதிருந்தது. வாடகைக்குக் குடியிருப்போரை அகற்றி வீட்டைப் பொறுப்பேற்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காததால் வழங்கு தொடர வேண்டி ஏற்பட்டது. 2016 முதல் 2018 வரை ரூபா 127,500 வழக்கறிஞர் கட்டணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | சபைக்குரிய சொத்துக்க ளிலிருந்து வருடாந்த வரியை அறவிட்டு சொத்துக்களின் உரித்தைப் பேண வேண்டும். | வாடகை வீட்டுக்குரிய உடன்படிக்கையை இரத்துச் செய்து அதனை ஒப்படைக்குமாறு வழக்கறிஞர் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. காணியின் அளவை நிர்ணயிப்பதற்கு மீண்டும் நடவடிக்கை எடுக்கப்படும். வீதி அபிவிருத்தி காரணமாக காணியின் அளவு மாற்றம் அடைந்துள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மினுவங்கொடை நகர அபிவிருத்தியின் கீழ் பஸ் தரிப்பிடம், புதிய வீதி மற்றும் வாரச் சந்தை என்பவற்றை நிர்மாணிப்பதற்குத் திட்டமிட்டு 34 தனியார் காணிகள் பிரதேச செயலாளரால் சுவீகரிக்கப்பட்டிருந்தன. அதன்போது 03 காணித் துண்டுகளைப் பிரசுரிக்கத் தவறியதால் அதன் ஒரு உத்தாளரின் கோரிக்கைக்கு ஏற்ப அபிவிருத்தி செய்த காணியை மீண்டும் ஒப்படைக்க வேண்டியேற்பட்டது. நகர சபை அதனை அளவிட்டிருக்கவில்லை. 17 ஆண்டுகளைக் கடந்தும் நிரந்தர இடம் வழங்கப்படும் வரை மாற்று இடங்கள் வழங்கப்பட்ட 08 பேருக்கு 2018 ஒக்டோபர் 05 ஆந் திகதியன்றும் நிரந்தர இடம் வழங்கப்படவில்லை. மேலும், 08 காணி உரிமையாளர்கள் இழப்பீட்டிற்கான வழங்குகளைத் தொடர்ந்து இருக்கையில் ஒரு நபருக்கு மாத்திரம் நகர சபையால் நிரந்தர உரித்துறுதி வழங்கப்பட்டிருந்தது. | காணிச் சுவீகரிப்பின் போது காணி அளவிடப்பட்டுப் பெறப்பட வேண்டும். காணி இழப்பீடு அல்லது வேறு காணிகள் வழங்கப்பட வேண்டும். | காணிச் சுவீகரிப்பின் போது திட்டத்தின் பிரகாரம் மாத்திரமே பொறுப்பேற்கப்பட்டுள்ளது. சுவீகரிக்கப்பட்ட சில காணிகளுக்கு பிற நபர்களிடமிருந்து சுவீகரிக்கப்பட்ட காணி வழங்கப்பட்டுள்ளது. வழக்குத் தொடரப்பட்ட போதும் சட்டபூர்வ நிலைமையைக் கருத்தில் கொள்ளாது காணி வழங்கப்பட்டது. |
| (இ) | ஜீம்மா மஸ்ஜீத் வீதியில் நகர சபைக்குச் சொந்தமான காணி உரிமையாளரால் சபைக்குரிய 3.3 பர்ச்சர்ஸ் காணி அத்துமீறிப் பெறப்பட்டிருந்தது. அதனைத் திருப்பிப் பெறாது 2016 ஆம் அண்டில் ரூபா 303,419 செலவில் மதில் சுவர் அமைக்கப்பட்டிருந்தது. | காணியின் சொத்துக்களது உரித்து உறுதி செய்யப்பட வேண்டும். | செலவழித்த தொகையை தவறிழைத்தவர் களிடமிருந்து அறவிடவும் சபை இழந்த காணியைத் திருப்பிப் பெறுவதற்கும் மதில் சுவரை அகற்றுவதற்கும் சபை தீர்மானித்துள்ளது. |
| (ஈ) | 2001 சனவரி 04 ஆந் திகதிய 1165/19 ஆம் இலக்க வர்த்தமானியின் பிரகாரம் 2000 செப்டம்பர் 28 ஆந் திகதிய மு.பி கம்/3072 இலக்க நில அளவைப் பத்திரத்தில் 16 | காணியின் சொத்துக்களது உரித்து உறுதி செய்யப்பட வேண்டும். | குறித்த வர்த்தமானியின் பிரகாரம் காணி சுவீகரிக்கப்பட்டு அது அபிவிருத்தி செய்யப்பட்டது. அவர் அதனை வேறொருவருக்கு |

| | | |
|---|---|---|
| ஆம் இலக்கக் காணித் துண்டாக பெயரிடப்பட்ட காணி மினுவாங்கொடை பிரதேச செயலாளர், நகர சபைக்கு ஒப்படைத்துள்ளார். தனியார் ஒருவர் இக்காணிக்கு உரித்துக் கோருவதால் காணியின் உரித்து சர்ச்சைக்குரியதாகி உள்ளது. | | விற்பனை செய்துள்ளார். அவர் அபிவிருத்திக்குத் தடையாக இருப்பதால் அவருக்கெதிராகச் சபையால் வழக்கு தொடரப்பட்டுள்ளது. |

**3.3 பயனற்ற செலவினம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வாரச் சந்தை ஒன்றை நிர்மாணிப்பதற்கு 2011 ஆம் ஆண்டில் உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திடமிருந்து ரூபா 05 மில்லியன் கடனாகப் பெறப்பட்டு ரூபா 7,807,501 செலவில் 03 கட்டிடங்கள் அமைக்கப்பட்டன. மினுவாங்கொடை நகரில் புதிய வர்த்தகக் கூட்டுத் தொகுதியை நிர்மாணிப்பதற்கு 2018 ஆம் ஆண்டில் கட்டிடம் தகர்க்கப்பட்டு புதிய கட்டிடத்தை நகர அபிவிருத்தி சபையிடம் வழங்குவதற்கு சபை நடவடிக்கை மேற்கொண்டிருந்தது. திட்டமில்லாத வேலையால் மேற்படி செலவினம் விரயமாகியது. உள்ளூர்க்கடன் நிதியத்திற்கு 2021 வரை 2011 இக்கடனுக்கு வட்டியுடன் ரூபா 1,971,606 செலுத்த வேண்டியிருந்தது. | மூலதனச் செலவினம் முறையான திட்டப்படி நடைபெற வேண்டும். | நகர அபிவிருத்தி அதிகார சபை புதிய வர்த்தக கூட்டுத்தொகுதியை இவ்விடத்தில் அமைக்க ஆரம்பித்துள்ளது. அதன் முதல் கட்ட வேலை 2018 ஆம் ஆண்டின் நிதியேற்பாட்டில் நிறைவடைய வேண்டும். உள்ளூர்க் கடன் நிதியத்தின் ரூபா 07 மில்லியன் கடனில் திறந்த கட்டிடம் ஒன்றை மாத்திரமே அகற்றப்பட வேண்டியேற்பட்டது. இதனை வேறொரு இடத்தில் அமைக்க முடியுமாதலால் நகர சபைக்கு அவசியமான வாகனப் பிரிவு அதன் மூலம் அமைக்கப்படும். ஆகவே இச்செலவினம் விரயமற்றது அல்ல. |
| (ஆ) | மினுவாங்கொடை பராக்கிரம விளையாட்டுத் திடலில் டீ.எஸ் சேனநாயக்காவின் சிலையை அமைப்பதற்கான மதிப்பீட்டைப் பெறுவதற்கும் மதியுரைச் சேவையை பெறுவதற்கும் 2018 செப்டம்பர் 30 ஆந் திகதியளவில் ரூபா 52,500 செலவாகியது. இதனைச் | மூலதனச் செலவினம் முறையான திட்டப்படி நடைபெற வேண்டும். | இச்சிலை அமைக்கப்பட்ட எலிஸ்பார்க் திடல் வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளதால் தற்போதுள்ள சிலை புதிய இடத்தில் பாதுகாப்பாக வைக்கப்படுவதற்கு ரூபா |

செயற்படுத்த முடியாது போனமையால் ரூபா 52,000 செலவினமும் பயனற்றதாகியது.

52,500 செலவிடப்பட்டது. இச் செயற்திட்டத்திற்கு எதிர்ப்பு ஏற்பட்டமையால் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டவாறுள்ளது.